**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 344/2022</u>**

நாள் 22.07.2025

PW1 – மனோன்மணி

த/பெ – லேட்.முருகன் செட்டியார்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of July 2025.)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். வாதிகளாகிய நாங்களும், ஒரு ராஜேஸ்வரி ஆகிய மூவரும் பார்வதியம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் அ.வ.எண்.25/2022 என்ற வழக்கினை நடராஜன் வாரிசுகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் அ.வ.எண்.67/2021 என்ற வழக்கை ராஜேஸ்வரி வாரிசுகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.67/2021 வழக்குச் சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணம் இருப்பதாக சொல்லி தான் வழக்கு நடத்தி வருகிறேன். தாவா சொத்துக்களைப் பொறுத்து உயில் ஆவணங்கள்எதுவும் இல்லை. நான் ஊட்டியில் உள்ள சார்நிலை கருவூலத்தில் உதவி கருவூல அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். எனது சகோதரர் 2–ம் வாதி விஸ்வநாதன் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் அவிநாசி விநாயர் கோவில் வீதி, உமையஞ்செட்டிபாளையத்தில் வசித்து வருவதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்து சின்னப்ப செட்டியாருக்கு பாத்தியப்பட்டிருந்ததாக சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் தென்வடல் முழம் 14, கிழமேல் முழம் 13 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த தாவா சொத்து விபரத்தில் கிழமேல் 30 அடி, தென் வடல் 33 அடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உமையஞ்செட்டி பாளையத்தில் உள்ள ஊர் நத்தத்தில் உள்ள வீட்டு மனைகளுக்கு 1994–ம் ஆண்டில் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்த வகையில் தாவா சொத்தின் புதிய நத்தம் சர்வே எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது நான் உரிமை கோரும் சொத்தின் புதிய நத்தம் சர்வே எண்.677 என்றால் சரிதான்.

3. நான் வழக்கு தாக்கல் செய்த தேதியில் சொத்தை அனுபவம் செய்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 புகார் மனுவில் உதகை என்று எழுதப்பட்டிருந்ததை அடித்து விட்டு அவிநாசி என்று எழுதி உள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 இறப்பு சான்றிதழில் இறந்தவரின் நிலையான முகவரியாக முத்து நிலையம், திண்டல், ஈரோடு மாவட்டம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சகோதரி ராஜேஸ்வரியின் வீடு உள்ள இடம் திண்டல் என்றால் சரிதான். எனது தாயார் பார்வதியம்மாள் உமையஞ்செட்டிபாளையத்தில் வசித்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது சகோதரி இறந்து போன ராஜேஸ்வரியின் வாரிசுகளை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ள போட்டோக்களை யார் எடுத்தார்கள் என்பதை காட்ட

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ள வர்த்தமான உறுதிமொழி ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.5–ல் சொத்து சின்னப்ப செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னப்ப செட்டியாருக்கு மல்லி செட்டியார்.1, அருணாசல செட்டியார்.2, அண்ணாமலை செட்டியார்..3, குப்புசாமி செட்டியார்.4, கருப்பம்மாள்.5, கிருஷ்ணம்மாள்.6, பார்வதி.7 ஆகியோர் வாரிசுகள். எனது தாயாருக்கு பார்வதியம்மாளின் உடன்பிறந்த சகோதரியாக சொல்லப்பட்ட மேற்படி கருப்பம்மாள் என்ற பெயர் தவறு என்றால் சரியல்ல, அவரை தாயம்மாள் என்றும் கூப்பிடுவார்கள். அந்த தாயம்மாளுக்கு சுந்தரம் செட்டியார்.1, பழனிச்செட்டியார்.2, கணேசமூர்த்தி.3, பாப்பாத்தி.4 ஆகியோர் வாரிசுகள்.

4. எனது தாய்மாமா மல்லி செட்டியாருக்கு 2 ஆண் மக்கள், 5 பெண் மக்கள் என்றால் சரிதான். மற்றொரு தாய்மாமா அண்ணாமலை செட்டியாருக்கு 3 ஆண் மக்கள், 1 மகள் வாரிசுகள். முத்துச்சாமி செட்டியாருக்கு 3 ஆண் மக்கள், 2 பெண் மக்கள் வாரிசுகள். கிருஷ்ணம்மாளுக்கு 2 பெண் மக்கள், 4 ஆண் மக்கள் வாரிசுகள். அருணாசல செட்டியார் மகன் ராமச்சந்திரன் என்பவர் 1993–ம் ஆண்டிலேயே இறந்து போய்விட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வர்த்தமான உறுதிமொழி ஆவணத்தில் சின்னப்ப செட்டியாரின் வாரிசுகள் அனைவரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் பண வரவு செலவு சம்பந்தமான விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாத நிலையில் ரிவென்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையொப்பம் பெறப்பட்டதற்கான காரணம் என்ன என்றால் அது எனது அம்மாவிற்கு

தான் தெரியும். கிருஷ்ணம்மாள் வா.சா.ஆ.5 ஆவணத்தில் 4–வது பக்கத்தில் மட்டும் தான் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரிதான். அதில் கண்ட சாட்சிகள் சுப்பிரமணி, ஈஸ்வரன், ராஜேஸ்வரி ஆகிய மூவரும் இறந்து போய் விட்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் தயாரித்தவர் ஊட்டியில் உள்ள அனிக்கொரை என்ற ஊரில் உள்ள போஜன் என்பவர் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் உரிய முத்திரைத்தாளில் எழுதப்படாததற்கு காரணம் ஏதேனும் உண்டா? என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணம் இந்த வழக்கிற்காக வேண்டி மோசடியாக பின்னிட்டு இந்த வழக்கிற்காக வேண்டி தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விபரத்திற்கும், வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். சின்னப்ப செட்டியாரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவக்குமார் என்பவர் அண்ணாமலை செட்டியாரின் பேரன் என்றால் சரிதான். மேற்படி சிவக்குமார் வா.சா.ஆ.5 ஆவணத்தில் தரப்பினர் அல்ல.

5. தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் அவர்களுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட இடத்தினை இடையூறு செய்வதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். 3–ம் பிரதிவாதி ரவி என்பவருக்கு சர்வே எண்.678–ல் வீடு மற்றும் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் ஸ்தலத்திலேயே இல்லாத நிலையில் பொய்யாக வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் பாத்திய உரிமையை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எதன் அடிப்படையில் மதிப்பு நிர்ணயம் செய்துள்ளேன் என்றால் அப்போது அதன் மதிப்பு ரூ. 1,10,000/− தான் இருந்தது. தாவா சொத்து அடிக்கணக்கில் தான் அமைந்துள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி சொத்து எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துக்களை இடையூறு செய்ய வேண்டி பொய்யாக உரிமையில்லா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால், இந்த வழக்கை உரிய வாரிசுகளை கட்சி சேர்க்காததாலும், சொத்தின் பாத்திய உரிமை இல்லாததாலும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் ஊட்டியில் தான் வசித்து வருகிறோம் என்றும், உமையஞ்செட்டிபாளையத்தில் நாங்கள் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :−** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.22 16:29:36 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**